**24.02.2026**
**O.S.No.111/2001 மற்றும் O.S.No.48/2005**
**பி.வா.சா.1 : கோவிந்தன்**
**9ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

1) வாதி தாக்கல் செய்த ஒரு தான பத்திரம் தவறானது என்றால் சரிதான். அந்த தான பத்திரத்தில் உள்ள சொத்து விவரங்களும் வழக்கு சொத்து விவரங்களும் முன்னுக்கு பின் முரணாக சம்மந்தம் இல்லாமல் இருக்கிறது என்றால் சரிதான். அதேபோல பின்னால் தாக்கல் செய்யப்பட்ட இரண்டு பிழைத்திருத்த பத்திரங்களும் அந்த சொத்து விவரங்களும் வழக்கு சொத்து விவரங்களும் முன்னுக்கு பின் முரணாக சம்மந்தம் இல்லாமல் இருக்கிறது என்றால் சரிதான். அதனால் வாதிக்கு எழுதப்பட்ட தான செட்டில்மெண்ட் சட்டப்படி ரத்து செய்வதற்கு 1ம் பிரதிவாதிக்கு முழு உரிமை இருந்ததது என்றால் சரிதான். மேற்படி தான செட்டில்மெணட் மற்றும் பிழைத்திருத்த பத்திரங்களும் நடைமுறைத்தப்படவில்லை என்றும் பெயரளவுக்கு தான் இருந்தது என்றால் சரிதான்.

2) வாதி வழக்கு சொத்தில் சுவாதீனத்தில் இருந்ததில்லை என்றால் சரிதான். தற்போது இருந்து வருகிறார். காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததில் இருந்து இருந்து வருகிறார். நான் சொல்வது தவறு என்றும் அவர் அனுபவ சுவாதீனத்தில் இல்லை என்றும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த இரண்டு ஆவணங்களின் அடிப்படையில் எங்களை அவர் வெளியேற்ற முயற்சி செய்தார் என்றும் எங்களை வெளியேற்றவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வது போல என்னை மட்டும் தான் வெளியேற்றினார் என்றும் இது வரை 9ம் பிரதிவாதி சிவாநந்தம் அனுபவத்தில் இருந்து வருகிறார் என்றால் சரியல்ல. மேற்படி தான செட்டில்மெண்ட் பத்தரங்கள் ரத்து செய்ததற்கு பின்னிட்டு அவருடைய பாட்டி சின்னப்பிள்ளை ஒரு கிரய பத்திரம் எழுதி வைத்தார் என்றால் சரிதான். அதையும் அவர் ரத்து செய்துவிட்டார்.

3) அந்த கிரய பத்திரத்தில் சரியான சொத்து விவரத்தை பொறுத்து தான் கிரயம் செய்தார்கள் என்றால் சரிதான். மேற்படி கிரய பத்திரத்தின் அடிப்படையில் சிவாநந்தம்

தான் வழக்கு சொத்தில் இருந்து வருகிறார் என்றும் 1ம் பிரதிவாதி சிவாநந்தத்திற்கு எழுதி வைத்த கிரய பத்திரத்தை ரத்து செய்ய அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல எனவே மேற்படி வழக்கு சொத்திற்கு சிவாநந்தம் மட்டும் தான் முழு அதிகாரம் உள்ளது என்றும் மற்ற நபர்களுக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. நான் மேல்முறையீட்டின் மூலம் தென்னங்குடிபாளையம் அப்பம்மசமுத்திரத்தில் உள்ள விவசாய நிலத்தை பொறுத்து வழக்கு நிலுவையில் இருந்து வரும் நிலையில் அதைப் பொறுத்து எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. எனவே வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரிதான்.

**<u>8,10,11,12ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:-**

**4)** இந்த வழக்கில் உள்ள 2ம் பிரதிவாதி தர்மலிங்கம் எனது அண்ணன். அவர் தற்போது இறந்துவிட்டார். அவருடைய மனைவி ராஜாத்தி, மகன் சசிகுமார், மகள் சசிகலா மகன் அன்பழகன் 8,10 முதல் 12 தரப்பினராக சேர்த்துள்ளேன் என்றால் சரிதான். ராஜாத்தி என்னுடைய அண்ணனின் இரண்டாவது மனைவி. 9வது பிரதிவாதி 2வது பிரதிவாதியின் முதல் மனைவியின் மகன். முதல் மனைவி பெரியம்மாள் என் அண்ணன் இறப்பதற்கு முன்பே இறந்துவிட்டார். முதல் மனைவி இறந்து 3 வருடம் கழித்து தான் ராஜாத்தியை திருமணம் செய்து கொண்டார் என்றால் சரிதான். எங்கள் குடும்பத்திற்கு தென்னங்குடிபாளையம் மற்றும் அப்பம்மசமுத்திரத்தில் உள்ள விவசாயம் நிலங்கள் உள்ளது. நரசிங்கபுர கிராமத்தில் வீடு உள்ளது.

5) அய்யனார்பாளையத்தில் 8000 ச.அடி உள்ளது. அது அப்பா அம்மா சம்பாதித்த சொத்து. தென்னங்குடிபாளையம் மற்றும் அப்பம்மசமுத்திரத்தில் உள்ள விவசாயம் நிலங்களை பொறுத்து அ.வ.எண்.95/2003 என்ற வழக்கை ரங்கநாதன் போட்டுள்ளார் என்றால் சரிதான். அந்த வழக்கில் 1/4 பங்கு ரங்கநாதனுக்கு சொந்தமானது என்று தீர்ப்பாகி உள்ளது என்றால் சரிதான். மீதமுள்ள 3 பங்கில் எனக்கும், தர்மலிங்கம் மற்றும் சுப்ரமணியத்திற்கு பாகம் உள்ளது என்றால் சரிதான்.

அந்த சொத்தில் சிவாநந்தம் பெயரில் சின்னபிள்ளை எழுதி வைத்த உயில் செல்லாது என்று தீர்ப்பாகி உள்ளது என்றால் சரிதான்.

6) நரசிங்கபுரம் வழக்கு சொத்திலும் எங்களுக்கு 1/4 பாகம் உள்ளது என்றால் சரிதான். தர்மலிங்க வகையறா, சுப்ரமணி வகையறா மற்றும் ரங்கநாதன் ஆகியோருக்கு தலா 1/4 பாகம் உள்ளது என்றால் சரிதான். அந்த 1/4 பாகம் கேட்டு தான் இந்த வழக்கை நடத்தி வருகிறோம் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்மந்தமாக எழுதி வைத்தாக சொல்லும் உயில் பத்திரங்கள் செல்லாது என்றும் அவ.எண்.95/2003 ல் தீர்ப்பாகி உள்ளது என்றால் சரிதான். எனவே மேற்படி வழக்கு சொத்துடன் தென்னங்குடிபாளையம் மற்றும் அப்பம்மசமுத்திரத்தில் உள்ள விவசாய சொத்துக்கள் பிரிக்கப்படாத இந்து கூட்டு குடும்ப சொத்துக்கள் என்றால் சரிதான். ரங்கநாதனுக்கு எழுதி வைத்ததாக சொல்லும் தான செட்டில்மெண்ட் பத்திரம் அமுலுக்கு வராததால் தான் சிவாநந்தத்திற்கு எழுதி வைத்த கிரய பத்திரமும் ரத்து செய்துவிட்டார்கள் என்றால் சரிதான்.

7) இந்த சொத்துக்கள் மற்றும் தென்னங்குடிபாளையம் மற்றும் அப்பம்மசமுத்திரத்தில் உள்ள விவசாய சொத்துக்கள் சம்மந்தமாக எழுத்து மூலமான பதிவு செய்யப்பட்ட ஏற்பாடு ஆவணங்கள் நிலுவையில் இல்லாத நிலையில் இந்த சொத்துக்கள் வாதி, எனக்கு மற்றும் தர்மலிங்கம் மற்றும் சுப்ரமணியத்திற்கு தலா 1/4 பாகம் உள்ளது என்றால் சரிதான். எனவே தனி உரிமை கோரி ரங்கநாதன் தாக்கல் செய்த **O.S.No.111/2001 மற்றும் O.S.No.48/2005** வழக்குகள் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரிதான்.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S

Digitally signed by GANESAN S
Date: 2026.02.24 17:46:44 +0530

**Subordinate Judge, Attur.**